# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்)

**மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*குருநாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ நெரஞ்சன் விக்கிரமசிங்க அவர்களால் 2011, யூன் மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2011, யூன் மாதம் 06 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***111 ஆம் சட்டமூலம்*** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 006100 -350 (2011/06)

## மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்)

### மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

''மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றம்'' எனக் கருதப்படும் மற்றும் குறிப்பிடப்படும் சங்கம் அச்சங்கத்தின் உறுப்பினர்கள் இணங்கிய சட்டக் கோவைக்கமைய சங்கத்தின் நோக்கம் மற்றும் அச்சங்கத் துடன் தொடர்புபட்ட சகல விடயங்களையும் பயன்மிக்கதாக அமுல்படுத்தல் மற்றும் முன்னெடுத்துச் செல்வதற்காக இதுவரை காலம் இலங்கையில் மடஹபொலயில் தாபிக்கப்பட்டுள்ளமையி னாலும் :

''மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றம்'' எனப்படுகின்ற இச்சங்கம் தாபிக்கப்பட்டது, உரிய நோக்கம் விடயங்களையும் அந்நோக்கம் மற்றும் விடயங்களை அச்சங்கத்தினால் இதுவரைகாலம் வெற்றிகரமாக மேற்கொண்டு மற்றும் அமுல்படுத்தப்பட்டமையினால் அச்சங்கத்தை கூட்டிணைப்பதற்காக விண்ணப்பித்துள்ளமை யினாலும் அக்கோரிக்கைகளுக்கு இடமளிப்பது பொதுமக்களின் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின்          ஆம் இலக்க, மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

**2**. இதன்பின்னர் ''சங்கம்'' எனக் கருதப்படும் மடஹபொல அங்கத்தவர்களை ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றத்தின் தற்பொழுதுள்ள அங்கத்தவர்கள் சகலரும் இத்தால் கூட்டிணைப்பதற்கும் கூட்டுத்தாபனத்திற்கு இதற்குப் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அங்கத்தவர்கள் இச்சட்டம் அமுலுக்கு வரும் தினம் தொடக்கம் இதற்குப் பின்னர் மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றம் என்ற பெயர் மற்றும் கீர்த்தியின்கீழ்

தொடர்ச்சியான நிலைப்பாடு கொண்டுள்ள (இதன்பின்னர் ‘‘கூட்டுத்தாபனம்’’ எனக் குறிப்பிடப்படும்) கூட்டுத்தாபனமாக இருக்க வேண்டியதுடன், பொதுவான இலட்சினையை வைத்திருக்க அதனைப் பயன்படுத்தும் போதும் கூட்டுத்தாபனத்தின் விருப்பத்திற்கமைய அதனை மாற்றியமைத்தல் மற்றும் முழுமையான அதிகாரம் இந்நிறுவனத்திற்கு உண்டு. மேலும் இக்கூட்டுத்தாபனத்தினாலும் இதற்கு எதிராக இதன் பெயரில் சகல நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) பௌத்த சாசனத்தை போசித்து பாதுகாத்தல், பௌத்த உரிமைகளைப் பாதுகாத்தல், பௌத்தர்களின் ஆன்மிகக் கல்வி, கலாசார மற்றும் சமூக உரிமைகளைப் பாதுகாத்தல் ;

(ஆ) வரலாற்று முக்கியத்துவம் மிக்க யாப்பஹுவ பிரதேசத்தின் பௌத்த தேரர்களின் முன்னேற்றம் பண்புசார் அபிவிருத்தியின் மூலம் சமூக விழுமியங்கள் உட்பட பொருளாதார சுபீட்சத்தை உருவாக்குதல் ;

(இ) பிரதேச சங்க சமூகத்தின் சுபீட்சத்திற்காக சங்க தலைமையகங்கள், அரச நிறுவனங்களின் அரச சார்பற்ற அமைப்புகள், தலதா மாளிகை சாசன அபிவிருத்தி நிதியம், மல்வத்து மஹா விகாரையின் ஸ்ரீ சித்தார்த்த சரணாங்கர நலன்புரி மன்றம், வெளிநாட்டு தூதுக்குழுவினர் ஆகிய நிறுவனங்களின் ஆலோசனை மற்றும் நிதிய ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளல் ;

(ஈ) நிதியத்தைத் தாபித்து அதனைக் கூட்டிணைத்து நீடித்த நிரந்தர சாசன நலன்புரி விடயங்களுக்கு அடித்தளம் இடல் ;

(உ) சாசன செயற்பாடுகள், நவீன தொடர் சாசன இயலுமைகள் மற்றும் மொழி இயலுமைகளை விருத்தி செய்யும் வசதிகளைக் கொண்ட 100 தேரர்களுக்கு வதிவிட வசதியுடன் கூடிய கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல்;

(ஊ) வாபி விழுமியங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப் பட்ட தேரர் அல்லாத சமூகத்தின் தொழிலை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையை கட்டி யெழுப்புவதற்காக உரிய நிறுவனங்களின் கவனத்தை ஈர்க்கச் செய்தல் ;

(எ) கிராமத்தில் இருந்து விகாரைக்கு ஏற்ற சிந்தனைக்குப் பதிலாக விகாரையில் இருந்து கிராமத்திற்கு என்ற சிந்தனையின் அடிப்படையில் மக்களுக்கு விகாரை ஊடாக வழங்க முடியுமான வசதிகளை வழங்குதல் ;

(ஏ) வழி தவறிச் செல்லும் இளைஞர்களை சரியான திசைக்கு திசைமுகப்படுத்தத் தேவையான நடவடிக்கை களை எடுத்தல் ;

(ஐ) நாட்டின் பேரழிவான மதுபோதையை ஒழிப்பதற்காக உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளல் ;

(ஒ) விகாரை வளாகத்தில் ஆரம்ப பாடசாலையை ஆரம்பிக்க ஆர்வமூட்டல் மற்றும் மாணவர்களுக் கிடையே சமய ஆர்வத்தை உருவாக்கும் வேலைத்திட்டங் களை அமுல்படுத்தல் ;

(ஓ) சமயப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படாத விகாரைக ளில் சமயப் பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தேவையான வங்கிக் கணக்கை ஆரம்பித்தல், பேணுதல் மற்றும் மூடுதல், பிணையுடன் அல்லது பிணையின்றி நிதியைக் கடனுக்குப் பெறல் அல்லது பெற்றுக் கொள்ளும்போது வழங்கல் மற்றும் நன்கொடைகளைப் பொறுப்பேற்றல் சேகரித்தல் கூட்டுத்தாபனத் தின் நிதியத்தில் முதலீடு செய்தல் சேவையில் அமர்த்தல்,

சேவையில் ஈடுபடுத்தல், சேவையில் இருந்து நீக்கும் அதிகாரம் உட்பட அபிவிருத்தி செய்தல் மற்றும் விருத்தி செய்வதற்குத் தேவையான அல்லது பொருத்தமான முறையில் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் அதன் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் அதிகாரம் இச்சட்டம் மற்றும் ஏனைய எழுத்துமூல சட்ட ஒழுங்கு விதிகளின்கீழ் செயற்படும் உரிமை கூட்டுத்தாபனத்திற்கு உள்ளது.

*கூட்டுத்தாபனத்தின் ஒழுங்கு விதிகள்.*

**5.** கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் ஒழுங்கு விதிகள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அச்சங்கங்களுக்கு அமைவாக தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும், நபர்களைக் கொண்ட அவ்விதிகளுக்கு நிருவாக சபையினால் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடு நிர்வகிக்கப்பட வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தில் முன்னர் வகித்த பதவிகளை தொடர்ந்தும் செயற்படுத்தல்.*

**6.** இச்சட்டம் அமுல்படுத்த ஆரம்பிக்கப்படும் தினத்திற்கு முன்னர் பதவிகள் வகித்த மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றத்தின் உத்தியோகத்தர்கள் இக்கூட்டுத்தாபனத்தின் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்பட்டு உத்தியோகத்தர்களாக செயற்பட முடிவதுடன் அத்தினத்தில் அங்கத்தவர்கள் இக்கூட்டுத்தாபன ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களாகும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுவான அதிகாரங்கள்.*

**7.** அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்ளல், அவர்கள் ராஜினாமா அல்லது அங்கத்துவத்தில் இருந்து நீக்குவதற்கான கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதிகள் அல்லது ஊழியர்களின் நிருவாக சபையின் கூட்டுத்தாபன செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய செயல் ஒழுங்குகள் தொடர்பிலும் கூட்டுத்தாபனத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும் இச்சட்டம் அல்லது ஏனைய ஏதேனும் எழுத்துமூல சட்ட ஒழுங்கு விதிகளுக்கு உட்படாத முறையில் ஒழுங்குவிதிகள் கூட்டுத்தாபனத்தினால் அங்கத்தவர்களின் பொதுக்கூட்டத்தில் அதற்கு வருகை தந்துள்ள மற்றும் வாக்களிக்க உரிமை கொண்ட அங்கத்தவர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் காலத்திற்குக் காலம் ஆக்குவது சட்டரீதியானதாகும்.

அதேபோன்ற விதி ஆக்கப்பட்டதன் பின்னர் அதேபோன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம்.

**8**. கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர்கள் சகல சந்தர்ப்பங்களிலும் கூட்டுத்தாபனத்தின் சட்டங்களுக்கு கட்டுப்பட வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர்கள் ஒழுங்கு விதிகளுக்குட்பட வேண்டும்.

**9**. கூட்டுத்தாபனம் ஏதும் கொள்வனவு, நன்கொடை, வெகுமதி மற்றும் உயிர்ச்சாசன ஏற்பாடுகளினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதும் சொத்துக்கள், அசையும் அல்லது அசையாத சொத்துக்களை வைத்துக் கொள்வதற்கு மற்றும் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் இச்சட்டத்தின் விதிகளுக்கும் மற்றும் ஏற்பாடுகளுக்கும் அமைவாக கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்தினால் கொண்டிருக்கும் சகல அத்தகைய சொத்துக்களையும் முழு அதிகாரத்துடன் அடைமானம் வைத்தல், விற்றல், குத்தகைக்கு விடுதல், பரிமாற்றம் செய்தல் அல்லது வேறுவிதத்தில் அவற்றை விற்றல் ஆகியவற்றிற்கு சட்டத்தில் இயலுமானதாக இருக்கும்.

கூட்டுத்தாபனம் சொத்துக்களைக் கொண்டிருக்கும்.

**10**. இச்சட்டம் ஆரம்பமான தினத்திற்கு முன்பிருந்த தினத்தில் இருந்த நிதியத்தின் சகல கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் இதனால் நிறுவப்பட்ட கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படல் வேண்டும். அத்தினத்தில் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படவுள்ள சகல கடன்களும், சந்தாக்கள் மற்றும் பங்களிப்புக்கள் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட வேண்டியதும் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டியதுமான கடன்கள்.

**11**. முகாமைத்துவச் சபையின் இரு அங்கத்தவர்கள் அவர்களது முன்னிலையில் எடுக்கப்பட்ட சாசனத்திற்கு அவர்களின் பெயர்களை கையொப்பமிடும் சாசனம் தவிர வேறு எந்தவொரு சாசனத்திற்கும் இக்கூட்டுத்தாபனத்தின் இலச்சினை இடப்படலாகாது மற்றும் அத்தகைய கையொப்பம் ஒரு கட்சியாக ஏதாவது நபரின் கையொப்பத்தின் சுயாதீனமானதாக இருக்கும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**12**. (1) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில், ''தகைமைபெற்ற கணக்காய்வாளர்'' என்பது,-

(i) இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற் காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் எனப்பொருளாகும் ; அல்லது

(ii) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று, எனப்போருள்படும்.

**13.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புகளையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது ; ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளவையுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். கலைக்கப்பட்டதன் மேல் எஞ்சியிருக்கின்ற ஆதனம்.

அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் முகாமைக்குழு உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*பொதுமக்களினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளவாறு பொதுமக்கள் அல்லது அரசியல்வாதிகள் அல்லது இணைக்கப்பட்ட அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அவர்களின் உரிமை மற்றும் அவர்களிடமிருந்து அல்லது அவர்களூடாக அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களைத் தவிர்த்த ஏனைய நபர்களின் உரிமைகளை பாதிக்காது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்